செய்தி வெளியீடு எண் :12 நாள் :14.03.2018

***தேனி மாவட்டம்***
***வேளாண் பெருங்குடி மக்களின் விவசாய தேவைகளுக்கான***
***உரங்கள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

******

தேனி மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக சிறுதானியப்பயிர்கள் மற்றும் காய்கறிப்பயிர்களுக்கான உரத்தேவை அதிகரித்துள்ளது. வேளாண் பெருங்குடி மக்களின் நலனை கருத்தில் கொண்டு தேவையான அளவு உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மத்திய மாநில அரசுகளின் உத்தரவின்படி நேரடி உர மானிய திட்டம் தேனி மாவட்டத்தில் 01.01.2018 முதல் அமுலில் உள்ளதால் அனைத்து சில்லரை உர விற்பனையாளர்கள் மற்றும் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், **விற்பனை முனை இயந்திரம் மூலமே ஆதார் எண்ணை பயன்படுத்தி உரங்கள் விற்பனை செய்ய வேண்டும்**. தவறும்பட்சத்தில் உரக்கட்டுப்பாடு சட்டம் - 1985-ன்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

நேரடி உரமானிய திட்டத்தின்படி உரம் வாங்குபவர் மற்றும் விற்பவர் இருவருக்கும் இடையேயான முழு தகவல் உறுதிபடுத்தப்படும். விவசாயிகள் வெளிப்படையாக இத்திட்டத்தின் மூலம் உரம் வாங்க முடியும். விவசாயிகள் அரசால் நிர்ணயித்த (MRP) அதிகபட்ச விலைக்கு மேல் பணம் கொடுத்து வாங்க தேவையில்லை. உரம் வாங்கும் விவசாயிகள் தங்களது ஆதார் எண்ணை கொடுத்து தங்களின் கைரேகையினை பதித்து பிறகு உரம் வாங்குதல் வேண்டும்.

ஆதார் அட்டையை பயன்படுத்தி உரம் வாங்குவதால் முறைகேடான உர விற்பனை முழுமையாக தடுக்கப்படுகிறது. அரசு நிர்ணயித்த விலைக்கே உரங்கள் கிடைக்கும். உரம் பதுக்கல் மற்றும் போலி உரங்கள் விற்பனை தடுக்கப்படுகிறது மற்றும் முறையான பில் ரசீது வழங்கப்படுகிறது, மேலும், விவசாயப்பெருமக்கள் உரங்கள் வாங்கும்பொழுது உரம் மூட்டைகளில் உள்ள விலையினை சரிபார்த்து வாங்க (அதற்கு மிகாமல்) கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், உர விற்பனையாளர்கள் உரமூட்டைகளில் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் (MRP) விற்பனை செய்தால் உரக்கட்டுப்பாடு சட்டம்-1985-ன்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகள் ஆதார் அட்டையினை பயன்படுத்தி தேவையான அளவு உரங்களை வாங்கி பயனடையலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**